செ.வெ.எண். 01/மார்ச் தேதி : 01.03.2017

# பத்திரிக்கை செய்தி

**தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தேவரசம்பட்டி கிராமத்தில 12வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**




தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தேவரசம்பட்டி கிராமத்தில 12வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.03.2017) துவக்கி வைத்து தெரிவித்ததாவது :-

கால்நடைகளில் பசு மற்றும் எருமைகளில் ஏற்படும் நோய்களில் கோமாரி எனப்படும் கால் மற்றும் வாய் நோய் முக்கியமானதாகும். இந்த நோய் ஏற்படும் கால்நடைகளில் வாய்கள் மற்றும் ஈறுகளில் புண், அதிக அளவில் உமிழ்நீர் சுரத்தல், காய்ச்சல், சளி, நாசித்துவாரங்களில் புண், மடிகாம்புகளில் புண், கால் குளம்புகளுக்கிடையே புண் ஏற்படுதல், நாக்கில் புண் காணப்படும். இதனால் மாடுகள் சரிவர உண்ணாமல் மெலிந்து போதல், சினை மாடுகள் கன்று வீசுதல் ஏற்படும். உரிய சிகிச்சை வழங்காவிடில் மாடுகளில் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இது மட்டுமின்றி பால் உற்பத்தி குறைதல், பின் விளைவாக மாடுகளில் சினை பிடித்தலிலும் பிரச்சனை ஏற்படும். இதனால் பெருமளவில் பொருளாதார இழப்பு ஏற்படும். கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஆறு மாதங்களுக்கொரு முறை கால்நடைகளுக்கு இலவசமாக கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இந்த முகாம் 1.3.2017 முதல் 21.3.2017 முடிய தர்மபுரி மாவட்டம் அனைத்து கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு வருகிறார்கள். தருமபுரி மாவட்டம் முழுவதும் சுமார் 3,59,100 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படும். இதில் 4 மாதத்திற்கு மேற்பட்ட கன்றுகள், அனைத்து பசு மற்றும் எருமைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் பசு மற்றும் எருமைகளுக்கு விடுபாடின்றி தடுப்பூசி போட்டுக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு. சீனிவாசன், துணை இயக்குநர் மரு. மகேஸ்வரன், புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு.நாராயணன், உதவி இயக்குநர்கள் மரு. இளங்கோவன், மரு. பாபு, கால்நடை உதவி மருத்துவர்கள் மரு. சரவணசெல்வன், மரு. ராம்குமார் மற்றும் மரு.ரேவதி, பால்வள துணைப் பதிவாளர், திரு.தனபால், ஆவின் துணை பொது மேலாளர் மரு. ரங்கசாமி உட்பட துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.